**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**OS. 184 /2023**

நாள்.15.04.2026

**பி.வா.சா.1. வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையில் கண்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். வா.சா.ஆ.1 – 27.09.2018 அன்று பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் வாதிக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்துகள் 5 இன சொத்துக்கள் எனக்கு சொந்தமானது ஆகும். அது குன்னலூர் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். இந்த வா.சா.ஆ.1 அடமான கடன் ஆவணம் தொடர்பாக எந்த தொகையும் நாளது தேதி வரை வரவு வைக்கவில்லை என்று சொன்னால் சரிதான். 01.11.2019–ம் தேதி அன்று வா.சா.ஆ.4 ஆவணத்தின் மூலம் அசல் வட்டியை திரும்ப கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்று சொன்னால் சரிதான். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை நான் கையொப்பம் போட்டு பெற்று கொண்டேன் என்றால் சரிதான். அந்த வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் பதிலறிவிப்பு ஏதும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். எதிர்வழக்குரையில் வழக்கு தொகை சம்மந்தமாக வாதியை எந்த தேதியில் சந்தித்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். அசல் ஆவணம் என் வசம் இல்லை என்றால் சரிதான். வாதி வசம் நான் ஒப்படைத்து விட்டேன் என்று சொன்னால் சரிதான். எனது எதிர்வழக்குரையில் உள்ள விவரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. வாதியிடம் நான் பல்வேறு தேதிகளில் பணம் கொடுத்ததாக

சொல்லிருந்தால் அது தவறு. நான் அவ்வாறு சொல்லவில்லை. நான் அசல் வழக்கில் எனது தரப்பு சாட்சியாக சண்முகம் என்பவரை விசாரிக்க தயாராக உள்ளீர்களா என்றால் சாட்சி சண்முகம் என்பவரை எனக்கு தெரியாது. நான் சாட்சி சண்முகம் என்பவரை தெரிந்து கொண்டே தற்பொழுது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது அவசர தேவைக்கு சொத்துக்களை அடமானம் வைத்து கடனாக பெற்று கொண்டு அதற்கான ஆவத்தை பதிவு செய்து கொடுத்து தற்போது நான் எழுதிக்கொடுத்த ஆவணத்திற்கு மாறாக வேறு பயன்பாட்டிற்காக செக்யீரிட்டிக்காக ஆவணம் ஏற்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதியிடம் உரிய அடமான கடன் ஆவணத்தை ஏற்படுத்தி அதன் அடிப்படையில் வாதியிடம் கடன் பெற்றுக்கொண்டு தற்போது அதனை திருப்பி கொடுக்க எண்ணம் இல்லாமல் இது வணிக கடன் என்று எதிர்வழக்குரை பொய்யான சங்கதியுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வாதி வழக்குரையில் கூறியுள்ளபடி பரிகாரம் கிடைக்ககூடியது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :– இல்லை</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.